மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விழுப்புரம் நகரின் தெற்கில் திருச்சிராப்பள்ளி தேசிய நெடுஞ்சாலையில் பூந்தோட்டம் கிராமம் புல எண் 219-ல் 6.25.0 ஹெக்டேர் அரசு ஏரி புறம்போக்கு நிலத்தை நீண்டகால குத்தகை அடிப்படையில் விழுப்புரம் நகராட்சி பெற்றிருக்கிறது. அதிலே பேருந்து நிலையத்திற்குத் திட்டம் இடப்பட்டிருக்கிறது. விரைவில் வேலை முடிக்கப்படும்.

மேட்டூர் கால்வாய்களைப் புதுப்பித்தல்.

*5909—**திரு. க. பழனிசாமி :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டூர் இடதுகரை, வலதுகரை கால்வாய்களைப் புதுப்பிக்க, தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, பராமரிக்க மற்றும் பழுதுபார்க்க வருடந்தோறும் அரசினால் ஒதுக்கப்படும் நிதிநிலைக்குத் தக்கவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு செய்து முடிக்கப்பட்டு வருகின்றன.

சபரி அணையைப் புதுப்பிக்கும் திட்டம்.

*9288—**திரு. கே. சுப்பிரமணியப்பிள்ளை :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அருகே பழையாற்றின் குறுக்கே உள்ள சபரி அணை தற்சமயம் பழுது ஏற்பட்டு கசிவு ஏற்பட்டுள்ளதால் இந்த அணையை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

(அ) சபரி அணையில் கசிவுகள் அடைக்கும் பணிகள் பராமரிப்புப் பணியின் கீழ் தற்போது செய்யப்பட்டுள்ளன. இவ்வணையை மேம்படுத்தும் பணிகள் தேசிய நீர் மேலாண்மை